

கழக தலைவர் – முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்க நேற்று நடைபெற்ற காட்டாங்கொளத்தூர் வடக்கு – தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியச் செயலாளர்கள் ப.சந்தானம், எம்.டி.லோகநாதன், ஒன்றிய குழுத் தலைவர் உதயா கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

**தலைமை: வெஃபாஸ் த.பத்மநாபன், டாக்டர் ஜனனி இளங்கோவன், முன்னிலை: நந்தனம் கி.மதி எம்.சி., எஸ். முரளி, மு.இ.ஏழுமலை !**

## மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

**டாக்டர் கனிமொழி சோமு, ஜெ.கருணாநிதி, டாக்டர்.எழிலன், கே.ஏழுமலை, பழ.செல்வகுமார், கோவி.லெனின் பங்கேற்பு!**

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ. 100 மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!**

சென்னை, ஜன.25-

கழகத் தலைவர் தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க, துணை முதல்வரின் வழிகாட்டுதலின்படி, இந்தி மொழி தினிப்பு எதிர்ப்பு போரில் ஈடுபட்டு, அன்னை தமிழ்மொழி காக்க, தமிழ் மொழிக்காக தியாகம் செய்த, மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் நிகழ்ச்சி, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தில் கழக சுற்றுச்சூழல் - மருத்துவ அணி - மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி சார்பில், சென்னை தென்மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் மாவட்ட துணை அமைப்பாளர் வெஃபாஸ் த.பத்மநாபன், மருத்துவ அணி மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் டாக்டர் ஜனனி இளங்கோவன் ஆகியோரின் தலைமையில், மயிலை மேற்குப் பகுதி செயலாளர் மற்றும் 121 வது மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி. மதி எம்.சி, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, 123வது வட்டக் கழகச் செயலாளர் மு இ.ஏழுமலை ஆகியோரின் முன்னிலையில், இன்று 25.01.2025 சனிக்கிழமை காலை 9 மணி அளவில், சென்னை 18, வன்னிய தேனாம்பேட்டை, திருவள்ளவர் சாலை, வன்னியபுரத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட திமுக, முன்னாள் 88 வது வட்டச் செயலாளர், திராவிட இயக்க தீரர், மொழிப்போர் தியாகி க. இளமதி (1924-1975) அவர்களின் திருவுருவ படத்திற்கு, மலர் பூக்கள் தூவி வீரவணக்கம் செலுத்தி, மொழிப்போர் தியாகிகள் தினத்தை, தமிழ் மொழி தியாகிகள் தினமாக அறிவித்த, கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், இளந்தலைவர் தமிழகத் துணை அவர்களுக்கும் நன்றி அறிவிப்பும், 100 பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், திராவிட இயக்கத்தின் நேற்றைய செய்தி, இன்றைய வரலாற்று கருத்தியல் பரப்புரையை மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

மொழிப்போர் தியாகி க.இளமதி அவர்களின் வீரவணக்க நாள் நிகழ்ச்சியில், மருத்துவ அணி தலைவர் டாக்டர் கனிமொழி சோமு, மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் எம் எல் ஏ, தியாகராய நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ கருணாநிதி எம் எல்ஏ, தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே ஏழுமலை எம் சி, கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் பழ செல்வகுமார், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மற்றும் மாநில தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் ஆகியோர் பங்கேற்று திராவிட கருத்தியல் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் சு.வில்லவன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் யோகேஷ் ரவி, மாவட்டத் துணைச் செயலாளர் கே.மலர், மயிலை மேற்கு பகுதி நிர்வாகிகள் ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.வி. அசோக் குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், மயிலை கிழக்குப் பகுதி நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, ஆர்.எல். தாஸ், எ.குமாரி, எல்.உதயகுமார், மயிலை மேற்குப் பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் க.கணபதி, மாவட்ட நெசவாளர் அணி தலைவர் கு.ராஜி, மாவட்ட கழக பிரதிநிதிகள் மூ.ஏ.முல்லை வேந்தன், கே.விஜயகுமார், வட்டக் கழக நிர்வாகிகள் எம். கே. ஆலை ஆனந்த், தேனை பி. பார்த்திபன், எஸ்.எல்.மணிகண்டன், எம்.உஷா, எஸ்.மாரிமுத்து, எஸ்.செல்வமணி, தே.ஜெகநாதன், மு.குப்பன், அ.விஜயகுமார், ஆர். அசோக் குமார், சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் என்.எஸ்.பாலசுப்பிரமணி, மாரிசாமி, செந்தில்குமார், மு.வேல்ராஜன், உ.யுவராஜ், எம். வடிவேல், கோ.வெங்கட்ராமன், செந்தில்குமார், அய்யாவு, வேல்ராஜ், வெங்கட்ராமன், ஹரி நாராயணன், துரைக்கண்ணு, சிவானந்தம், விஷ்ணு சங்கர், சார்லி. மாவட்ட மற்றும் மயிலாப்பூர் தொகுதி மருத்துவ அணி நிர்வாகிகள் டாக்டர் கோ.சக்தி விக்னேஷ், டாக்டர் எம்.எஸ்.சரவண குமார், டாக்டர் எஸ்.ஜெயகர், டாக்டர் பா.நிகிதா, டாக்டர் எஸ்.சில்வியா, டாக்டர் ஜி.விவேகானந்தன், ஆ.முருகவேல், நா.மாறன், ஜெ.லாரன்சியா. மயிலை மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜ சுரேஷ்குமார், அ.நாகராஜன், மூ.இராஜேந்திரன், மயிலை கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவனேசன், வி வெற்றிவேல், கோ கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி. மயிலை மாமன்ற உறுப்பினர்கள் கீதா முரளி எம்.சி., விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆர்.ரேவதி எம்.சி.

மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஏ.தேவேந்திரன், ஏ.பாஸ்கர், கே.ஜோதி, தினேஷ் மாணிக்கம், மா.நந்தகோபால், வசந்த் கபாலி, த.ஷங்கர், மயிலை மேற்கு பகுதி நிர்வாகிகள் கவிதா குமரிமுத்து, எஸ். லதா, ஆர்.மகாலட்சுமி, எஸ்.விஜயகுமாரி, ஜெ.ஸ்ரீதர், வி.எம்.சங்கர் கணேஷ், எஸ்.ஈஸ்வர் ராவ், வட்ட இளைஞரணி நிர்வாகிகள் நா.உதயன், கு.சிரஞ்சீவி, ரா.சதீஷ், செ. லோகேஷ், மாணவரணி இரா.இளவழகன், எஸ்.ஜீவா, கே.கார்த்திக், மகளிர் அணி பி.வசந்தா, எம். வனஜா, கே.பிரபாவதி, என்.சரித்தா, எஸ்.நாகம்மாள், எஸ்.சாந்தி மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட கழக, நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் சுற்றுச்சூழலை மாவட்ட துணை அமைப்பாளர் தி நகர் லைன் சக்திவேல் மருத்துவ அணி துணை அமைப்பாளர் எஸ் சக்தி லாவண்யா, கழக முன்னோடி ஆர் தயாளன், கழக உடன்பிறப்பு வி சிவா, கழக இளைஞரணி ஹரிஹரன் இளங்கோவன், பி.எல்.ஏ. 2 சி.பாலன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு: மொழிப்போர் தியாகி க. இளமதி / பட்டம்மாள் குடும்பத்தினர், கிருஷ்ணவேணி தட்சிணாமூர்த்தி, த. புகழேந்தி குமார், த. இளங்கோவன், த. வசுமதி சிவா, வெஃபாஸ் த. பத்மநாபன், டாக்டர் ஜனனி இளங்கோவன், எஸ்.ஷக்தி லாவண்யா, ஹரிஹரன் இளங்கோவன் .

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் முழுவதும் ஊர் தோறும் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி!

**மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (25.01.2025 சனிக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ஊர் தோறும் கொடி ஏற்றுவோம் இரண்டாம் கட்ட நிகழ்ச்சியாக கடம்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெறுகிறது

இதில் கழக முன்னோடி டி.ரகுநாதன், கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் முழுவதும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழக கொடிகளை ஏற்றி அமைக்கப்பட்ட கல்வெட்டுகளை திறந்து வைக்கிறார் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

**திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# செந்தழல் மறவர்க்குச் செய்வோம் வீர வணக்கம்!

கற்காலம் முன்பிருந்தே
கடல்தோன்றும் காலமுதல்
முற்பிறந்த தமிழ்மொழி
முச்சங்கம் கண்டமொழி
பொற்பான இலக்கியப்
புதையலைக் கொண்டமொழி
விற்பன்னர் ஆக்கிய இலக்கண
விதிமொழி!
தெற்கிருந்து வடக்குவரை
திசையெலாம் திகழுமொழி!

கற்பதற்கு எளியமொழி
கழறுதற்கு இனியமொழி
கொற்றங்கள் ஆண்டமொழி
குமரியாம் அழகுமொழி
இற்றைக்கும் உலகத்தில்
இயங்குகின்ற
மூத்தமொழி!
விற்புலி கயல்கொண்ட
வேந்தர்கள் பூண்டமொழி!
சுற்றுகின்ற புவிக்கோளில்
தோன்றிய முதல்மொழி!
எற்றைக்கும் இளமைமொழி,
எப்பொருளும் உணர்த்துமொழி!
மற்றைய மொழிகளும்
மணிவயிறு உதித்தமொழி;
புற்பூண்டு முளைக்காமுன்
புவியிலே பூத்தமொழி!
நெற்பொலியும்
தமிழ்நாட்டின்
நீண்டநெடுங் காலமொழி
ஒற்றைமொழி தனித்தியங்கும்
உயராற்றல் பெற்றமொழி
தற்கால மொழிகளுக்குத்
தலைமொழி; கலைமொழி!
உற்றமொழி வழக்குஎழுத்து
ஒப்பிலாது உடையமொழி;
செற்றரை அழித்தமொழி,
செம்மொழியாய்ச் செழித்தமொழி!

நற்கோல மொழி,எங்கள்
நற்றமிழ் காப்பதற்கு
விற்கோலம் பூண்டெழுவோம்,
விரட்டுவோம் இந்தியை!

பெற்றெடுத்து வளர்க்காத
பெரும்பேயாய் ஆடுமொழி,
பிற்றைமொழி, பழம்பெருமை
பெரும்புதுமை இலாமொழி
கற்றைமொழி சந்தையில்
கண்டமொழி கதறுமொழி
புற்றெடுத்த கரையானாய்ப்
புறப்படும் இந்திமொழி
சற்றுமிங்கே வாராமல் தடுத்திடுவோம்;
எப்போதும்
முற்றுகை இட்டிடுவோம்
முறியடித்து ஓட்டிடுவோம்!
வெற்றுரை அல்ல,பெரும்
வீரத்தால் விளம்புமுரை!
அற்றது திணிப்பிங்கே,
ஆர்த்தெழுவோம்,
போர்தொடுப் போம்;
தொற்றுமொழி வெற்றுமொழி
தொலைத்திடுவோம் என்றெழக்
கற்கோட்டை அசைந்தது,
கல்லூரி பள்ளிகள்
மற்கோட்டம் ஆயின
மாநிலம் எங்கணும்!
புற்கூட்டம் வீழ்ந்தது;
புதுப்புரட்சி நிகழ்ந்தது!

தாக்கவரும் இந்திதான்
தானைபல கூட்டிவர
நீக்குதற்கு, தடையிட்டு
நிறுத்துதற்கு வழியென்று
தீக்குள்ளே எரியவிட்டார்
தேக்குமரம் போலவே,
யாக்கைகள் தீய்ந்தாலும்
இன்னுயிர் மாய்ந்தாலும்
பூக்கமழ் மணத்தினும்
புதுமணம் கொண்டதமிழ்
காக்கவே பிறப்பெடுத்தோம்,
கனலிலே இறப்புடுத்தோம்!

சாக்காடும் எங்களுக்குச்
சந்தனப் பூச்சுதான்;
பூக்காடும் ஆகுமே,
புனலாறு போலுமே,
வேக்காடும் இனியபல
வீணைப்பாட்டு ஆகுமே,
நோக்காடும் உணர்ச்சிமிகும்
நோன்பாகும் சாவுமே!
ஈக்களும் அண்டாத
இரும்புடல்; எங்களின்
நோக்கமே இந்தியெனும்
நுணல்மொழித் திணிப்பினைத்
தேக்கமே இல்லாமல்
திண்மையாய் எதிர்ப்பதே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

ஆக்கந்தான் தமிழ்க்கெனில்
ஆர்வமாய் ஆருயிரும்
போக்குவோம், அனலிலே பொசுங்குவோம்,
அதனாலே ஊக்குவோம் தமிழரிடம்
உரிமைப்போர் கிளப்புவோம்,
மாக்களாம் தில்லிதான்
மறத்தமிழர்
மதிக்காமல்
ஏய்க்கலாம் எனநினைத்தால
எரிமலை ஆகும்தீ
மாய்க்கலாம் அவர்களை,
மாற்றலாம் வரும்நாளில்
பூக்கலாம் தமிழாட்சி
பொற்காலம் ஆகலாம்!

பெரியார்தீ மூட்டிடப்
பெருங்கனல் அண்ணாவால்
எரிதீயாய் மாறியது,
எங்கெங்கும் பரவியது!
உரிமைக்குக்
குரல்கொடுத்து
உருவாகும் கிளர்ச்சிகள்!
அரிமாக்கள் வரிப்புலிகள்
அடலேறாம் மாணவர்கள்
கரிபூசி அழித்தனர்,
கட்டாய இந்தியை
வரவிடோம் என்றனர்;
வஞ்சினம் பூண்டனர்!
உரந்தந்த கலைஞரை
ஒருதனிமைச் சிறையிடப்
பரந்தெழுந்த போராட்டம்
பாரினைக் கலக்கியது!

இரந்திங்கே கெஞ்சிடோம்,
இறுதிவரை துஞ்சிடோம்,
கரந்திங்கே இந்திதான்
கால்வைக்க ஏற்றிடோம்!

விரட்டுவோம் என்கின்ற
விண்குரல் எழுந்தெங்கும்
நிரந்தரம் ஆயிற்று;
நீக்கியது ஆட்சியை!
வரந்தந்தாற் போல்மக்கள்
வழங்கினர்
அண்ணாவின்
கரங்களில் ஆட்சியை!
கட்டாய இந்திக்கு
நிரந்தர விடைதந்து
நீக்கினார்! கலைஞரோ
இருந்தவரை இந்திக்கோர்
இம்மியும்
இடம்தராமல்
புரந்தனர் செந்தமிழை!
புரிந்தநல் ஆட்சியைத்
தரமாகக் காக்கின்ற
தளபதியும் இந்திமொழி
ஒருநாளும் தமிழ்நாட்டின்
உள்நுழைய விடமாட்டோம்,
இருமொழிக் கொள்கையே
என்றென்றும் நிலைக்குமெனத்
திருமொழி புகல்கின்றார்;
செந்தமிழ் போற்றுகின்றார்!
மறுமொழி இதற்கேது?
மாவீரம் எழும்போது!

இந்தியாவின் ஆட்சிமொழி
ஏராளம் பேர்பேசும்
இந்திதான் என்றொருநாள்
எதிர்ப்பினைப் புறந்தள்ளித்
தந்திரமாய்ச் செய்தசட்டம்
தமிழுக்கும் தமிழர்க்கும்
தந்திடும் தாழ்வெனத்
தலைவர்கள் புலவர்கள்
அந்தநாள் முதலாக
ஆர்ப்பாட்டம் போராட்டம்
சிந்தனைப் பேச்சுகள்
சிறைப்படல் மறியலென
எந்தவிதம் எதிர்த்தாலும்
இறுமாப்பாய் ஒன்றியம்
இந்தியைத் திணிப்பதே
இலட்சியம் என்றலையச்
செந்தமிழ்க்கு எதிராகச்
சின்னமொழி யாஎன்று
செந்தீயில் குளித்தவர்கள்
தியாகநாள்!தமிழர்கள்
சொந்தமொழி காத்திடச்
சுட்டெரித்துக் கொண்டோரை,
பந்தபாசம் எல்லாமே
பைந்தமிழ்மேல் வைத்தோரை
சொந்தமும் குடும்பமும்
துளியேனும் நினையாரை
வெந்தழலில் எரிகின்ற
வேளையிலும் வீரமுடன்
செந்தமிழ் வாழ்கவென்றும்
செம்மொழி வாழ்கவென்றும்
இந்திதான் ஒழிகவென்றும்
ஈனமொழி வீழ்கவென்றும்
முந்துகுரல் எடுத்தோரை
முழக்கங்கள் செய்தோரை
அந்திபகல் இரவுடன்
அலர்காலை முழுநாளும்
சிந்தனையில் இருத்தவேண்டும்,
தீரத்தைப் போற்றவேண்டும்!

இந்திமொழித் திணிப்பிங்கே
இல்லாமல் வெல்வதே
வெந்தொளிரும் மறவர்க்குச்
செயும்வீர வணக்கமாம்!



நேற்று (24.1.2025) சென்னை, கிண்டி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமை அலுவலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் தலைமையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கியும், 2023–24 ஆண்டுகளில் 100% தேர்ச்சி பெற்ற அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் 26 முதல்வர்களுக்கு விருதுகள் வழங்கியும் மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலைய அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ. வீரராகவராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் நாயக்கன் குப்பம் ஊராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டிடப் பணியை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் ஒன்றிய குழு துணைத் தலைவர் பி.சேகர், ஒன்றிய குழு உறுப்பினர் டி .சஞ்சய் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. அன்னக்கிளி ராஜா, பாதர், கிளை செயலாளர் சேட்டு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்